ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரஜோத்பத்தி௵ ஆவணி௴ பகுதி அ.
Vol 8. August & September 1931. No. 8.

"நம்பெருமாளது நடையழகு"

நான்முகன் முதலாக இராமபிரான் ஈறாக இலங்கிய எண்ணிறந்த மன்னர்களாலும் ஆராதிக்கப்பட்டு வந்த அரங்கநாதன் அயோத்தியைவிட்டு தென்தமிழ்ச் சோழநாட்டை அடைந்தருளி இருகாவிரிகளின் இடையில் எழுந்தருளியபின், தமிழ் மக்களால் 'அழகியமணவாளன்' என்று போற்றப்படலாயினன். என்றென்றும் மாறுபடாத அழியாத தெய்விகப் பேரழகுடையவன் எவனோ, அவனே தமிழ் மக்களின் தனிப்பெருந்தலைவன் ஆயினன். தமிழ் மக்கள் இயற்கையின் அழகை இனிது உணர்ந்து இயற்கை இன்பத்தில் படிந்து இபற்கையழகுத் தெய்வத்திற்கு அடிமைப்பட்டு வாழ்வோர் ஆவர். 'ஆடவர்பெண்மையை அவாவுந் தோளினாய்' என்ன நின்ற வடிவில் பேரழகினனாய இராமபிரானே பெரிதும் ஈடுபடநின்ற அரங்கநாதன், கோதையார் கூறியவாறு "குழல் அழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில் எழு கமலப்பூவழகர்" என்னும்படி அழகுமயனாக திகழ்பவன் ஆவன். அப்பெருமானது பல்வகைப்பட்ட அழகுகளுள், ஈண்டு எழுத எடுத்துக்கொண்டது அவனது நடையழகையாகும்.

அயோத்திமாநகரத்தில் இராமபிரானது திருவாராதனையில் எழுந்தருளியிருந்தபோது, அப்பெருமான் பரதன் லக்ஷ்மணன் சத்ருக்னன் எனும் தமது தம்பிமார் மூவருடன் அரங்கநாயகனைச்

சுமந்து 'வையாளி' போட்டதாகச் சொல்வர். இன்றும் நம்பெருமாள் 'வையாளி' கண்டருள்வதுபோல், ஏனைய எத்திவ்யதேசத்து எம்பெருமானும் அவ்வளவு அற்புதமாக கண்டருள்வதில்லை என்பது கண்கூடு. ஏனைய எவ்வெம்பெருமானிடமும் இல்லாதபடி இவ்வரங்கன் பக்கலில் மட்டும் நடையழகு ஒப்புயர்வற்றுச் சிறந்து ஒளிர்வதன் காரணம் என்ன ?

மிதிலைப்பதியில் கண்டவர் சிந்தை கவரும் பெருவனப்பினைகத் தெருவூடே நடந்துசென்ற இராமபிரானைக்கண்டு தெய்விகக் காதல்கொண்ட சானகிப்பிராட்டியாரது உள்ளத்தில், முதன்முதலில் புகுந்தது எது ? "ஏழையர் ஆவி உண்ணும் இணைக்கூற்றங் கொலோ ? கோலத் திரள் பவளக் கொழுந் துண்டமோ ?" என ஐயுறும் செங்கனிவாயோ ? "கோளிழைத் தண் முத்தமும் தளிரும் குளிர்வான் பிறையுப்-கோளிழையா உடைய கொழுஞ்சோதி வட்டமோ" என வியக்க விளங்கும் குறுநகை தவழும் குளிர்மதி வதனமோ ? வீரகோதண்டத்துடன் அணைந்து குன்றெனக் குலவும் திண்டிறல் திருத்தோளோ ? மாதரார் புனத்தில் மையல் விளைவிக்கும் மலர்மாலை அலையும் பணிமார்போ ? இல்லை ; இல்லை. அவற்றுள் எதுவும் மைதிலியின் மனத்தைக்கவர்ந்தனவில்லை. பின்னை, அன்னையின் சிந்தையைக் கவர்ந்தது எது ?

" படர்ந்துஒளிபரந்துஉயிர்பருகும்ஆகமும்
தடந்தருதாமரைத்தாளுமேஅல
கடந்தருமாமதக்களிநல்யானைபோல்
நடந்ததுகிடந்ததுஎன்உள்ளம்நண்ணியே "

("கன்னம் சுரக்கின்ற மிக்க மதம் பெருகப்பெற்ற களிப்பை உடைய (உத்தம கஜலட்சணம் முழுவதும் அமையப்பெற்றுள்ள) சிறந்த ஆண் வேழம் போன்று, கம்பீரமாக அப்பெருமான் நடந்துசென்ற நடையழகே எனது அகத்தில் பொருந்தி எப்பொழுதும் அகலா வண்ணம் பதிவதாயிற்று ")-என்று பிராட்டியாரின் கூற்றாக கம்பர் பெருமான் சித்திரித்துக் காட்டியிருப்பதன் நுட்பம் கவனித்து உணரற்பாலது. அத்தகைய நடையழகு அண்ணல் இராமபிரான் பக்கலில் அமைந்திருந்ததேபோல், அப்பெருமானது ஆராதனையில்

எழுந்தருளியிருந்த அரங்கநாயகன் பக்கலிலும் அமைந்து விளங்கு வது இயல்பேயன்றோ !

பராக்ரம புருஷர்களின் நடையழகை மதயானை, வீறுடைய காளை, சீறுகின்ற வேங்கை, தேசுடைய கோளரி என்பனவற்றின் நடைகளோடு ஒப்பிட்டுரைப்பது கவிமரபு. விலங்கினத்தில் பெரு மதிப்புடையதாக விளங்கும் வேழம் மெல்ல மெல்ல அசைந்து நடந்துசெல்லும் தோற்றமேபோல் இரவிகுலப் புரவலர்கள் பற்பல ரால் வழிபடப்பட்ட வேந்தர்வேந்தனுய அரங்கநாயகனும், "தொடர் சங்கிலிகள் சலார் பிலாரெனத் தூங்கு பொன்மணி யொலிப்ப—படு மும்மதப் புனல் சோர வாரணம் பைய நின்றூர் வதுபோல்"—இன்னும் மெல்ல மெல்ல அசைந்து அசைந்து நடந் தருளும் அற்புதக் காட்சி கஜகதியை நினைவூட்டுவதாகும். அன்று இராமபிரானது வேழநடையைக் கண்ட மிதிலைச்செல்வி கருத் தழிந்து காதல் மிகுந்து நின்றதேபோல், செங்கோலுடைய திரு அரங்கச்செல்வனுரைத் தமது ஆருயிர்த் தலைவராக அகத்தில் கொண்டு வழிபட்டுவரும் அப்பெருமானது மெய்யடியார்கள் அவரது வேழ நடையைக் கண்டு இன்றும் இதயம் கனிந்து இன்புற்று நிறகின்றனர். சீரிய நாயகனது நடையழகு காதலில் சிறந்த காரிகையின் கண்கட்கு ஒப்புயர்வற்ற தனிப்பெரும் இன்பம் ஊட்டுவதேபோல், பகவானிடத்தில் நாயிகாபாவம் கொண்டு 'மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே' என்று உள்ளம் உருகி நிற்கும் உண்மையன்பர்களது கண்கட்கு, இன்றுங்கூட அரங்கனின் வேழ நடையழகு பெரு மகிழ்வூட்டுவதாக இருக் கின்றது.

இனி, வீறுடைய ஏறு மிக்க செருக்குடன் கூடியதாக அசை ந்து அசைந்து நடக்கும் காட்சியேபோல் நம்பெருமாள் நடந்தரு ளும் காட்சி ரிஷபகதியை நினைவூட்டுவதாகும். இராமகிருஷ்ணுதி அவதாரங்கள் எடுத்தும் திருந்திலாத வையத்தாரை உய்விக்க இருள்தருமாஞாலத்தில் தோன்றி, 'செய்ய தமிழ்மாலைகள் நாம் தெரிய ஓதி - தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே'-என்று பிற்காலத்தவர் வியந்து போற்றுமாறு மறைகளில் மறைந்து கிடக்

கும் உண்மைகளை எளிய நடையில் உள்ளத்தை உருக்கும் வகையில் எங்ஙனே சொல்லினும் இன்பம் பயக்கக் கூடியனவாக அன்பு கனிந்து ஒழுகும் அருட்பாக்கள் வாயிலாக விளக்கிக்காட்டி வையத்தாரை உய்வித்த ஆழ்வார்கள் பதின்மராலும் பாடப்பெற்ற தனிப் பெரும் பெருமையாலும்; "பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து இப்பூதலத்தில்—மெய்யைப் புரக்கவந்த" இராமாநுசனை, தமது திருப்பதியை இருப்பாகக்கொண்டு விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை வளர்க்கச் செய்துகொண்டருளிய சிறப்பாலும்; அவ்விளையாழ்வார் பணித்தவண்ணமே 'பத்துக்கொத்தின'ராக பகுக்கப்பட்டவர்களின் கைங்கர்யங்கள், இன்றளவும் 'கட்டு' குலையாது நடைபெற்று வருவதால் கொண்டருளும் மகிழ்ச்சியாலும் திரு அரங்கேசர் கொண்டருளிய செருக்கு, இன்றும் அவரது விடை நடையில் நன்கு தோன்றுவதாக இருக்கின்றது. அத்தகைய அரங்கனது வீரநடையைக் கண்டு களிக்கும் அன்பர்களது அகங்களிலே,

"புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன் தன் மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்குஇனியார்நிகர்நீணிலத்தே!"

என்றிருக்கும் ஞானகர்வமன்றி, "வெண்மை எனப்படுவது யாதெனில் ஒண்மை, உடையம் யாம் என்னும் செருக்கு" - என்றபடி தமது அறிவாற்றல்களில் கொள்ளும் ஈனகர்வம் சிறிதளவும் தோன்றாது.

பாய்ந்து பாய்ந்து செல்வதேபோல் நம்பெருமாள் நடந்து செல்வது, சீற்றம் மிகுந்த புலியின் நடையை நினைவூட்டுவதாகும். "மெய்யர்க்கே மெய்யனாகும் விதியிலா என்னைப் போல—பொய்யர்க்கே பொய்யனாகும் புட்கொடி உடைய கோமான்"-என்றவாறு தன்னை உண்மையன்போடு வழிபடும் மெய்யன்பர்கட்குத் திருவரங்கச்செல்வன் எவ்வளவுக்கெவ்வளவு எளியனாகவும் இனியனாகவும் இலங்குகின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு அறநெறி பிறழ்ந்த வன்னெஞ்சர்கட்கு அரியனாகவும் கொடியனாகவும் இருக்கின்றான். நெஞ்சினுள் வஞ்சக நினைவுகள் பலவற்றையும் வைத்துக்கொண்டு, வெளிக்குமட்டும் பரமபக்தர்களாக நடிக்கும் இழிதகையினர் பெரி

தும் அஞ்சிநிற்கும் வண்ணம் தனது ‘ வ்யாக்ர கதி ’ யில் சிறத்தை தோற்றுவித்தருள்வது போல், நம்பெருமாள் பாய்ந்து பாய்ந்து நடந்து செல்கிறார். அப்புலி நடையைக் கவனித்துக் காணும் வஞ்ச நெஞ்சினர், தமது இழிதகைமைக்கு இரங்கி சீர்திருந்தி நடத்தல் கூடும்.

நம்பெருமாள் ஆஸ்தானத்திலின்றும் புறப்பட்டு ஜயவிஜயர்களருகில் எழுந்தருளியவளவில், கோளரியேபோல் குதித்துக் குதித்து நடந்து திரும்பி நின்றருள்வார். ஒருமுறை அவ்வற்புதக் காட்சியைக் கவனித்துச் சேவிப்பின், “ மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்—சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து—வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி—மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்—போதருமாபோலே ”—நம்பெருமாள் எழுந்தருள்வது அன்பர்களது நெஞ்சினின்றும் என்றென்றும் நீங்காது. ‘ மலைக்குகையில் உறங்குகின்ற காலத்திலும் சத்ருக்கள் மண்ணுண்ணும்படி வீரஸ்ரீயை உடைத்தாயிருக்கும் ’ சீரிய சிங்கம், “ வலாஹகாதிவ நிஷ்க்ராந்த: ஸிம்ஹோ கிரிகுஹாசய: ” என்றபடி அம்மலையினின்றும் புறப்பட்டாற்போலே புறப்பட்டருள்வது, “ பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்—தங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமானை - செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்க்கே ” உரிய தனிப்பெரும் சிறப்பாகும். ‘ ம்ருகாணாஞ்ச ம்ருகேந்த்ரோஹம் ’ என்று கீதையில் அருளியவாறு கோளரியை ஒத்த பெருமிடுக்குடன் கூடியவராக எழுந்தருளும் ‘ ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீவில்சீர்—ஆற்றல் மிக்காளும் அம்மா ’ னுடைய அணி அரங்களது சிம்ஹகதி சேவையில், அப்பெருமானது ஒப்புயர்வற்ற அற்புத திவ்ய தேஜஸும் காம்பீர்யமும் பெரிதும் வெளிப்பட்டுநிற்கக்காணலாம். “வெங்கண்வாள் எயிற்று ஓர் வெள்ளிமா விலங்கல் விண்ணுறக் கனல் விழித்தெழுந்தது—அங்ஙனே ஒக்க அரி உரு ” எடுத்தருளிய அரங்கநாயகன், அக்கோளரியின் பெருமிடுக்கு இன்றும் தன்பக்கலில் தோன்றுமாறு வருணனைக்கு எட்டாத மகாகாம்பீர்யத்துடன் சிங்கநடைகொண்டு

எழுந்தருளும் அற்புதக்காட்சியைக் கவனித்து சேவிக்கும் உண்மை யன்பர்களது உள்ளத்தில், அப்பெருமானது காம்பீர்யமும் திவ்ய தேஜஸ்ஸும் தோன்றி அவர்களை ஆனந்தக்கடலில் ஆழ்த்தும். உலகத்தார் உணரும் வண்ணம் உவமை ஒன்றை உரைக்கவேண்டி யிருப்பதை முன்னிட்டு, நம்பெருமாளது திவ்யதேஜஸ்ஸுக்கும் நடையின் காம்பீர்யத்துக்கும் சிங்கத்தின் நடையை உவமிப்பதேயல் லது, அரங்கனின் பெருமிடுக்குக்கும் சிங்கத்தின் சிறுமிடுக்குக்கும் ஒப்பிட்டுரைப்பது கூடுமோ?

அரங்கநகரில் நடைபெற்று வரும் அச்சிங்க நடையைக் குறிக் கும் 'வையாளிசேவை'யைப்போல் வேறு எங்கும் காண இயலாது. சிற்சில உற்சவங்களில் நம்பெருமாள் அச்வாரூடராய் எழுந்தருளுங் கால், அப் பரியின்மீது எருந்தருளியிருந்த வண்ணமே 'கோணை வையாளி' சேவை சாதித்தருள்வது காண்போர்க்குப் பெருவியப்பு ஊட்டும் அற்புதக் காட்சி ஆகும்.

இவற்றையெல்லாம் கருத்துட் கொண்டே திருப்பாவைக்கு விரிவுரை செய்தருளிய பெரியவாச்சான்பிள்ளை, "மாரி மலை முழைஞ் சில்" எனும் பாசுர வ்யாக்யானத்தில் பின்வருமாறு அருளிச்செய் வாராயினர் :—"சதுர்க்கதியிறே :— நடையிலே, ரிஷபத்தினுடைய வீறும் மத்த கஜத்தினுடைய மதிப்பும் புலியினுடைய சிவிட்கு (கோபமு)ம் ஸிம்ஹத்தினுடைய பராபிபவநஸாமர்த்யமும் தேஜஸ்ஸு)மே தோற்றியிருக்கை. நமக்கு இவையெல்லாம் நம்பெருமாள் நடை யழகிலே காணலாம்". 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்த' இராமாநுசரால் பத்துக் கொத்தினராகப் பகுக்கப்பட்ட கைங்கர்யபரர்களுள் 'ஸ்ரீ பாதம் தாங்குவோர்' ஆகிய வேதியர்கள், இன்றளவும் பெரியகோயிலில் இருந்து வருவதுபோல் வேறு எத் திவ்யதேசத்திலும் இல்லை. பிரமோற்சவகாலங்களிலும் கூட-ஆனை வாகனப் புறப்பாட்டன்று தவிர மற்றெல்லாப் புறப்பாடுகளிலும், மேற்குறிப்பிட்ட 'ஸ்ரீ பாதம் தாங்கும் கைங்கர்ய'த்திற்கு உரிமை பூண்டவர்களான ஸ்வாமிகளே நம்பெருமாளை எழுந்தருளப் பண்ணிவருவது குறிப்பிடத்தக்கது. பெருமாள் புறப்பாட்டுக்கு முன், 'ஸ்ரீ பாதம் தாங்கிகோள்' என்று அருளப்பாடு ஆனவுடன்,

அவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வாய் பொத்திக் கொண்டு உட்புகுங் காட்சி வேறு எங்கும் காண இயலாத அற்புதக் காட்சி ஆகும்.

தன் பக்கலில் பெரிதும் குறைப்பட்டு நின்ற பெண்மணிகளைக் கண்ணபிரான் விச்லேஷத்தினின்றும் மீட்டுக்கொண்டருளியது, கண்டாரை மையலேற்றி மயக்குவிக்கும் தமது ஒப்புயர்வற்ற அற்புத நடையழகாலேயே அன்றோ! இன்று நம்பெருமாளாகத் திருவரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது நடையழகுக்கு யாதொரு கண்ணெச்சிலும் வாராவாறு இன்றும் பெருமாள் புறப்பட்டருளுந்தோறும் அரையர் அவ்வழகுக்குத் திருப்பல்லாண்டு பாடிச்செல்வார் ஆயினர்.

"வன் பெரு வானகம் உய்ய அமரர் உய்ய மண் உய்ய மண் உலகில் மனிதர் உய்ய—துன்பம் மிகு துயர் அகல அயர்வொன்றில்லாச் சுகம் வளர அகம் மகிழும் தொண்டர் வாழ" திருஅரங்கம் பெரிய கோயிலில் எழுந்தருளியிருக்கும் நம்பெருமானது நடையழகில் உண்மையன்புடன் ஈடுபடுவது, ஆன்ம உய்வுக்கேற்ற சிறந்த வழியாகும். ஆண்டுதோறும் அணி அரங்கேசர் 'நித்யோத்ஸவ ஸமாயுக்தன்' என்றவாறு நூற்றைம்பதுக்கு மேற்பட்ட புறப்பாடுகள் கண்டருளி வருகின்றாராதலின், எம்மாதத்திலும் அப்பெருமானது நடையழகைக் கண்டு களிக்கக்கூடும். ஆதலின், பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைப் பின்பற்றி நடக்கும் ஒவ்வொருவரும், கண்டவர் சிந்தை கவரும் ஒப்புயர்வற்ற பெருவனப்பினனாகிய நம்பெருமாளது நடையழகில் உண்மையன்புடன் ஈடுபட்டு உள்ளம் உருகி நின்று, இம்மையிலும் மறுமையிலும் 'தென்னரங்கத்து இன்னமுத'ரது திரு அருளுக்கு இலக்காகப் பெற்று இன்புற்று உய்வார்களாக. திரு அருள் முன்னிற்பதாக.

ஆ. வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்,
ஆரியூர்.

ஸ்ரீ

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(99-ம் பக்கத்தொடர்ச்சி).

இங்கு 'ப்ரவிசிந்தயந்த்யா:' என்றது ஒரு நிச்சயத்தைக் கொண்டாளென்று காட்டும். 'நமக்கு இது தகாது; இந்த நினைவை அறவே ஒழிக்கவேண்டுவதே தகும்' என்று தீர்மானித்தாள், முடிந்து பிழைப்பதே தகுமெனக் கொண்டாளென்று கொள்ளில் குறையாதெனின்; அப்போது தன்னுடைய துக்கத்தையும், காடும் மலையும் கடலும கடந்து யாருமறிந்து செல்லமுடியாத விடத்தில் தானிருக்கும் இருப்பையும், புண்ணிற் புளிபெய்தாப் போலப் பேசும் இராவணன் புன்சொற்களையும் இவள் சிந்தித்தாளாகச் சொல்லவேண்டும். இவ்வாறு கொள்வதற்கிடமில்லை. இங்கு ரக்ஷணம் தப்பாதென்கிற உறுதி யுண்டாவதற்கு ஒற்றுமையான சிந்தை யுண்டானதாகச் சொல்லியிருப்பதால், 'இபபோது கொண்டதணிவுதகாது; ரக்ஷணம் தப்பாது' என்று கொண்டு அந்த ப்ரவ்ருத்தியை ஒழித்தாள் என்று கொள்ளத்தட்டில்லை.

பெருமாளைப்பற்றிச் சிந்திப்பதாவது — நமக்கு வேண்டிய ரக்ஷணத்துக்கு உபயோகப்படக்கூடிய குண விசேஷங்களைப் பற்றியதாம். இளையபெருமாளைப்பற்றிச் சிந்திப்பதாவது.— பெருமாளுக்கு ஸ்வாதந்த்ர்யம் தலையெடுத்து ரக்ஷணத்திற்கு உபயோகமாயுள்ள குணவிசேஷங்களை இவன்தோஷங்கண்டு சிக்ஷணத்துக்கு உபயோகமாகவொட்டாமல் கிருபையை உண்டாக்கி, ஸ்வாதந்த்ர்யம் தலைமடியச செய்து ரக்ஷணத்துக்கே உபயோகமாகும்படி செய்யவல்ல புருஷகாரத்தினுடைய குணவிசேஷங்களைப்பற்றியதாம். ஆக, இவ்விரண்டு சிந்தையாலும் ரக்ஷணம் தப்பாதெனவே உறுதியுண்டாகக்கூடியது.

இனி, ஸ்வகுலத்தைப்பற்றிய சிந்தையாவது.— இப்படி ரக்ஷணத்துக்கே அமையப்பெற்ற இவ்விருவருடைய குணவிசேஷங்களும், கடல் வடிந்ததுபோலச் சுவரிலும் தப்பாது; தப்பிலும் பாரதந்த்ரயமாயே யமையப்பெற்ற * தன்னுடைய குலத்திற்கும் இப்ப்ரவ்ருத்தி ஒருவகையாலும் சேராது எனச் சிந்திப்பதாம். "மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே" பெண்ணாய்ப் பிறந்து பாரதந்த்ரஜந்மமாய்ப் பிறந்து மாயும் வகையறியேன் என்று பெரியார் பேசினார். ஆக இம்மூன்றுவிதமான சிந்தையாலும் உண்டாகக்கூடியது நபச்சு இது ஒரு வகையாலும் ஒட்டக்கூடியதல்ல; விட்டொழிப்பதே உறுவதெனக் கொண்டதொரு உறுதியேயாகையாலே, இவ்வாறுண்டானதொரு உறுதி கொண்டு திருவடி சொல்லுக்கு முந்தியே இவள் திரும்பினாள். திருவடி வார்த்தையானது முன்னமே இவள் கொண்ட துணிவுக்குப் ப்ரதிஜ்ஞை செய்ததித்தனை.

இனி, இவள் ப்ரவ்ருத்தியைப்பற்றி யோஜிப்போம். "லங்காஸ்த்ரீ விதேஹராஜதநயா ந்யாயேந லாலப்யதே" "லங்காரீத்த விதேஹ ராஜதநயா ந்யாயேந லாலபுதே" ஸித்தோபாய நிஷ்டைக்கு இவள் நிஷ்டையை நிதர்சனமாக்கி யிருக்கையாலே அந்நிஷ்டையுடைய அதிகாரி இங்கிருக்கும் நாளில் அந்நிஷ்டையைக் குலைத்தற்குரிய நிலையை விளைவிக்கும் பலகலக்கங்கள் நேருவது இயற்கையேயாம். அப்படி நேருங்காலங்களில் எம்பெருமானுடைய குணங்களையும், புருஷகாரஞ் செய்யப்புகுந்தவர்கள் குணங்களையும், ஸ்வஸ்வரூபத்தையும் ஆராய்ந்து தெளியக்கடவர்; என்று தெளிந்து கொள்வதற்காகவே இப்படி அல்பஜ்ஞனும் கூசவேண்டும் ப்ரவ்ருத்தி நிஷ்க்ருஷ்டஜ்ஞான முடையவளான இவளுக்கு விளைந்தது.

இப்படி இவர்கள் தெளியக்கூடியதற்கன்றெனின்; அல்பஜ்ஞனுக்குண்டாகும் அல்பநிரூபணமும் கூட இவளுக்கில்லை யென்று சொல்லவேண்டிவரும். ஆக, பிராட்டியினுடைய நிலை கொண்டு நாம் தெளிந்து கொள்ளக்கூடிய விஷயங்களாவன.—

---

* இங்குத் தன்னுடைய குலமென்றது தொண்டக் குலத்தை.

தனக்குச் சக்தியுண்டானாலும், அது தன்னுடைய ரக்ஷணத்தில் ஒரு விதத்தாலும் அந்வயிக்காதபடி நோக்கிச் செல்ல வேண்டியதென்பதும், அதைப் பராநுக்ரஹத்துக்கே உபயோகப்படுத்த வேண்டுமென்பதும், (பிராட்டி ராக்ஷஸிகள் தன் திறத்துக் குற்றஞ் செய்ததாகக் கருதாது, சிக்ஷிக்கப்புகுந்த திருவடியிடத்து அவர்கள் செய்கையைக் குணமாகக்காட்டி, பெருமாளிடத்திலும் ஒரு சமயம் தனித்து அங்ஙனமே அறிவித்தனள்.) இதனால் சத்ரு மித்திர விபாகமன்றிக்கே அநுக்ரஹபரனாய்த் தம் விஷயத்தில் பிறர் செய்த குற்றங்களை எம்பெருமான் ஸந்நிதியிலும் பெரியார்ஸந்நிதியிலும் தெரிவித்துக் குறைகூறுதிருக்க வேண்டுமென்பதும், ஸம்ஸாரத்திற்கு அஸம்பாவிதமாகையால் கலக்கங்களை விளைவிப்பது இயற்கையாமென்பதும், அக்கலக்கங்களில் விவேகத்துக்கு வருந்தி இடங்கொடுத்து அதை மேலாக்கி எம்பெருமான் பிராட்டி ஆசார்யன் -இவர்களுடைய அநுக்ரஹைகோபயோகியான குண விசேஷங்களையும் தம்முடைய நிஷ்க்ருஷ்டஸ்வரூபத்தையும் நிரூபித்து விவேகத்தை வளரச்செய்து தெளியக்கடவரென்பதும் பிறவுமாம்.

ஆகையால் இந்நிஷ்டையுடைய அதிகாரிக்கு ப்ராக்ருதவாஸனையாலே கலக்கங்கள் தோன்றும்போது தெளியவேண்டிய முறைக்கு இவ்வர்த்தங்களையும், மற்றும் வேண்டியவைகளையும் தெளிய சுருக்க உபதேசிக்கப்புகுந்த த்வயத்தை அர்த்தாநுஸந்தானத்துடன் எப்பொழுதும் அநுஸந்திக்கக்கடவர்.

இவ்வர்த்தங்களை விரிவாகத் தெளிய உபதேசிக்கக்கூடிய திருவாய்மொழி ஸ்ரீராமாயணம் என்பவைகளை நித்ய காலக்ஷேபமாகக்கொண்டு காலங்கழிக்கக் கடவர்; என்று நம்மாசார்யர்கள் நியமித்துப்போந்தார்கள்.

ஆழ்வாரும், "நீள்கடல் சூழிலங்கைக்கோன் தோள்கள் தலை துணி செய்தான், தாள்கள் தலையில் வணங்கி நாள் கடலைக் கழிமினே" என்று ஸ்ரீராமாயணத்தை அநுஸந்தித்துக் கலக்கங்களை விளைவிக்கும் காலக்கடலைக் கழியுங்களென்று உபதேசித்தார்,

இந்நிஷ்டையுடைய அதிகாரிக்கு ஏற்படக்கூடிய பெருமை எத் தன்மையுடையதெனின்; அதுவும் பிராட்டி பெருமை கொண்டே தெளியலாம். அது வருமாறு.—

பெருமாள் ஊணு முறக்கமுமற்றுத் தன்னுடம்பு பேணாதே கண்டார் காலிலே விழுந்து அவள் திறத்தில் அப்ராதிகூல்யஞ் செய்தாருக்கும் பெரும்பதமளித்துக் கடல் புகுந்து கூறுமாறி பாய்ந்து அவள் விரோதியைத் தானே போக்கிப் பலருமிருக்கப் புஷ்பகத்தில் தானே எடுத்துத் தன்மடியின் மீதே வைத்துத் தான் அவளையடையவேண்டிப் பட்டபாடங்களையும் காட்டி நடுவிலே நிறுத்தி நாடுதிருத்தி மஞ்சனமாட்டி நல்லுடையுடுத்தி அலங் கரித்து நாடுபுகுந்து ஏகாஸனத்திலிருந்து அப்பொழுதாக ஒரு மஹோத்ஸவங் கொண்டாடியது போல, "ஸலனகாகிநாரசேத" "ஸஏகாகிநாமேத" என்கிறபடியே ஊணுமுறக்கமுமற்று இந் நிஷ்டையுடைய அதிகாரியைத் தேடி இவனைத் திருத்திப்பணி கொள்ளும் ஆசார்யனுக்குத் தானும் அடிமைப்பட்டு இவள் திறத்து அப்ராதிகூல்யமுடையாரையும் இவள் ஸம்பந்தங்கொண்டு விஷயீ கரித்து இவனை வேண்டி இவளிருக்கும் இடந்தேடிப் பவக்கடலில் புகுந்து நெடுநிலை நின்று இவன் இவ்வுடலை விடும் நாள் வேண்டி ப்ரஜைவாயிலே முலையை வைத்துக் கிரந்தியை அறுக்கும் மாதா வைப்போல் அங்கே கொடுக்கும் அநுபவத்தை இங்கே கோயில் களிலே கொடுத்து விரோதியைத்தானே கழித்து ஆளிட்டு அழைக் காதே, "எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல் வந்தருளி" என் கிறபடியே பெரியதிருவடி திருத்தோளிலே தானே தோற்றித் தன் கையால் எடுத்துத் தன் மடியில் வைத்து, "நாகத்தை நகு நெஞ்சே" என்கிறபடியே இவனை இந்நாள் வரை நலிந்து போந்த ப்ரக்ருதி யின் சிறுமையைக்காட்டி நடுவிலுள்ளார் இவனை ஆதரிக்கத் தானும் கூடவிருந்து அநுபவித்து மஞ்சன மாட்டி "ஶதம் மாலா ஹஸ்தா:" "சதம் பஞ்சசதாந்யப்ஸரஸ:" என்று தொடங்கி இவனை அலங்கரித்து, " வீடுதிருத்துவான் " என்றபடி தெளிவிசும்பு திருநாட்டையும் இவன் வரவுக்காக அப்போதாகத் திருத்தி நலமந்தமில்லதோர் நாட்டிலே புகுந்து நாகணை மேவி

நாய்ச்சியாருடன் கூடி மாறி மாறி மடியிலே கொண்டு அவன் ஆநந்திக்க இவனும் அதுவே பலமாய் எல்லை கடந்த ப்ரீதிவிசேஷத்தாலே மற்றொன்றை நினைக்கவும் செய்யவும் முடியாதே அவன் திறத்தில் சேஷவ்ருத்தியை இரந்து ஸதாபச்யந்திப்படியே அவனையே நோக்கிக்கொண்டு அம்ருதமயமான சாகரத்தில் முழுகிக்கிடந்தவன்போல ஆநந்த நிர்ப்பரனாயிருப்பன்.

உபாஸகர் தம்முடைய உபாஸன பலத்தாலே தம்முடைய விரோதியைத்தாமே கழிக்கத்தேடி அது தலைக்கட்ட அருமைப் பட்டு அவனிருக்குமிடந்தேடி கதிசிந்தனம் பண்ணி, அவன் வந்து கொடு போகையன்றிக்கே ஆதிவாஹிகர்களே வழி நடத்தச் சென்று மஞ்சனமாட்டி கோலங்கொண்டு திருமாமணி மண்டபஞ் சென்றுகிட்டக் கண்டு அவனும் இவன் வரவு கண்டுகளிக்க இருவரும் ஒருவாறு பரிமாறி ஆநந்தியாநிற்பர்கள்.

அத்யவஸாய்நிஷ்டர் வரணத்து விஷயமாவர். அதாவது— இருந்த விடந்தேடிச் சென்று வருந்தியழைத்து உபசரித்து அகங் கொண்டு புகுந்து ஆதரிக்கப்படும் விருந்தினர் போலே அவன் மேல் விழுந்து தேடிப்பிடிக்கும் அதிகாரிகளாவார். உபாயாந்த்ர நிஷ்டருக்கு ஸ்வீகார விஷயத்வமேயுள்ளது. அதாவது.—இவன் இருந்த விடம்தேடி இவனுடையாரைக்கண்டுகொடு வழி கொடு அகம் வந்து புகுந்த விருந்தினரை வந்த வரையில் ஆநந்தங் கொண்டு உபசரிக்கப்படும் விருந்தினர் போலாவார்கள்.

ஆனால் இப்படி எம்பெருமானை யடைய வேண்டிய முறையில் இப்படிப் பேதங்கொள்ளுமளவில் அங்கு அநுபவிக்குமுறை குறைந்து, ஆநந்தமுங் குறைவுபட்டிருக்குமோ வென்னில்; இல்லை. அங்கு யாருக்கும் அநுபவம் வ்யவஸ்திதமாயே யுள்ளது. அதனால் ஆநந்தங்குறைவுபடாது. பிராட்டிக்கு அநுபவம் வேறு. திருவநந்தாழ்வான் அநுபவம் வேறு. திருவடி அநுபவம் வேறு. இப்படி அநுபவம் வெவ்வேறாகவிருக்கவும் ஆநந்தத்தில்வேற்றுமையில்லை. "பரமம்ஸாம்யமுபைதி" என்று ஆநந்தத்தில் ஈச்வரனுக்கும் இவர்களுக்கும் வாசியில்லை. அங்கு நேரும் அநுபவம் எது

வேயாகிலும் அநுபவித்துத் தலைக்கட்டினேமென்கிற முடிவு ஒரு விஷயத்துக்கும் நேரக்கூடியதாயுள்ள பரிச்சேதம் இல்லாமையாலே ஆநந்தமும் அபரிச்சின்னமாயிருக்கும்.

எம்பெருமானுடைய குணங்களை அநுபவிக்கப்புகுந்த நித்யஸூரிகளும் தம்தாம் அநுபவிக்கும் குணங்களுக்கு ஏற்றஞ் சொல்லிக்கொண்டு பிதற்றா நிற்பர்; என்று "பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான்" என்று பெரியார் பேசினார். ஆக அநுபவ பேதத்தாலும் ஆநந்ததாரதம்யமில்லை. மேலும் சுகர்ஞானம் எங்கும் நிறைந்து நின்றபோது வியாஸர் குழந்தாய்! என்று கூப்பிட மரங்களும் பதிலளித்தபோல இவர்களுக்கும் தர்மபூதஜ்ஞானம் விகாஸத்தை யடைந்து எங்கும நிறைந்து நிற்பதால் எல்லாருடைய அநுபவமும் தங்களுடையதாக நினைக்கத்தட்டில்லை, ஆகையாலும் ஆநந்தக் குறைவில்லை. இதனால் சரணாகதி நிஷ்டனுடைய அத்யவஸாயம் உயர்ந்தது. அதுக்கீடான பெருமையும் மேலானது. ஆகையால் எல்லாவற்றாலும் மேன்மையுடையதென்பது யதாமதி நிரூபிக்கப்பட்டது. பெரியார் இதிலுள்ள பிழையனைத்தையும் திருத்தி அமைத்துக்கொள்ளுமாறு அவர்களையடி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ:

திருநாரணன் திருத்தாள் திரள்.

ஸ்ரீ உ. வே. வி. வே. ஆட்கொண்ட வில்லி கோவிந்தாசார்ய
ஸ்வாமி திருவடிகளே சரணம்.

விசுருதி மகோற்சவம்.

1931-௵ ஆகஸ்டு௴ 11௳ மங்களவாரம் இரவு 9-மணிக்கு நமது ஆசார்ய ஸ்வாமியாகிய மைசூர் ஸ்ரீ உ. வே. வித்தியாபூஷணம் வேதாந்தரத்னம் ஆட்கொண்ட வில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகள் ஒளிமிகு திருநாடு அலங்கரித்ததை முன்னிட்டு பெங்களூர் உக்கடபாளையம் ஸ்ரீமத் மணவாளமாமுனி சபையின்கண் (16-8-31) முதல்கொண்டு மாலையில் திருவாய்மொழி சேவாகாலம் நடைபெற்று (23-8-31) ஆதிவாரம் காலை 11½-மணிக்கு சாற்றுமுறையும் அன்றுமாலை 8-மணிக்கு பகவத் பாகவத குழாங்களோடு ஷை சுவாமிகள் திருஉருவப்படம் வீதிப்புறப்பாடும் நடைபெற்றன.

ஸ்ரீமத் கோயில் அழகிய மணவாளராமாநுஜ ஏகாங்கி சுவாமிகள் திருவடி சம்பந்தரும், பெங்களூர் குவலயானந்த விலக்கணக் கோர்வை சாலைத்தமிழ்ச்சங்க வித்வான் ச. ம. சவரியப்ப தாசர் அவர்களின் மாணவரிலொருவருமாகிய சென்னையம்பதி எ. பால கிருஷ்ண ராமாநுஜ புலவரவர்களால் ஸ்ரீ உ. வே. வி. வே. ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகள் விஷயமாக இயற்றிய,

புகழணி பாமாலை.

கருணையுடனிருகலையையிலகுமணிநிலைபாவ
கவலைவினைபுனைந்தேயாண்டோன்
அருமைதனைதினமகிழ்பெரும்புதையேகன மருக
வளித்ததொருபெருமைபூண்டோன்

திருவுருவாய்வித்யாபூஷணவேதாந்தரத்ன
    தினகரனுமாட்கொண்டவில்லி
பெருமானார்கோவிந்தாசாரியசுவாமிகள்
    பேசுவார்வைகுந்தநாதன்

பலமுறையும்பெருமான்றன்குணங்களையேபேசிப்புகழ்
    பகுத்தறிவைவகுத்துச்செம்மல்
நிலமுறையும்பாந்தர்க்குவிளக்கமொடுபவமறுக்க
    நினைப்பதுவைதந்தபூமான்
குலமுறைமைதனையெண்ணுதுகளதனைவுநீக்கியடி
    கோருவார்க்கமுதையூட்டும்
நலமுறையுங்கோவிந்தாசாரியரேயென்றக்கால்
    நடுக்கமுறப்போரும்வினையே.

நாள் பாட்டு.

ஆதியேபரமன் அச்சுதநாமன் அன்பில்களித்திடுநாள்
ஆகியவுபயவேதாந்தரகசியம்அனுதினமோதிடுநாள்
மேதினியில்மைசூர்மாநகர்திருவுருமேற்குலமணுகியநாள்
மேலாம்புரட்டாசிபூராடம்மேம்படவுதித்திடுநாள்.

கோதிலாதிருக்குலத்தடியவர்கூடிக்கொண்டாடவுகந்திடுநாள்
கொள்ளவேதிருமந்திரவுபதேசம்கோரவேசெய்திடுநாள்
தீதிலாமோக்கம்திடமெனஆடித்திருவாதிரையெனுநாள்
தேசிகர்கோவிந்தாச்சாரியர்சேர்ந்ததும்பெருநாளே

அன்று ஸ்ரீ உ. வே. வித்யாபூஷணம் வேதாந்தரத்னம் ஆட்கொண்டவில்லி கோவிந்தாசார்ய ஸ்வாமிகளின் வைபவம் பல வித்வான்களால் உபந்யசிக்கப்பெற்றது. ஷை ஸ்வாமி திருநாடலங்கரித்ததைப்பற்றி ஸபையார்கள் அநுதாபந்தெரிவித்தார்கள்.

மூ. காரிமாறராமாநுஜ தாஸர்,
பெங்களூர் சிட்டி.

ஸ்ரீ

நன்கொடை.

அற[illegible]ந்து மூத்தவறிவுடைய ஆன்றோரின் இன்னருளினால் இனிது நடைபெற்று வருகிற நமது திவாகரத்திற்கு இது காறும் சிலர் நன்கொடை புரிந்துள்ளார்களென்பதை யாவருமறிவர். இங்ஙனம் இவர்கள் உதவிபுரிந்ததுபோல அஞ்சாவாசல் ஸ்ரீமாந் நாராயணசாமி ரெட்டியாரவர்கள் ஜீவித சந்தா தாராகச் சேர்ந்து இருபத்தைந்து ரூபா கொடுத்துதவினார். இவர், பகவத் பாகவதா சார்ய கைங்கர்யதுரந்தரர்; பெரியாரைத் துணைகொண்டொழுகும் பெற்றியினர், குறிப்பறிந்தீயுங் கொள்கையர்; அறங்கடைச் செல்லா மதுகையர்; பிறர் நலன் பேணும் பெட்பினர்; நீதிமுறை திறம்பா நெஞ்சினர்; “தோன்றிற்புகழொடு தோன்றுக” என்பதற்கிலக்கியமாயுள்ளவர். இத்துணைப் பெருந்தகையாளராகிய இவரால் திவாகர விஷயத்திற் கொண்டுள்ள ஐயப்பாடகலப் பெற்றோம். நமது திவாகரத்திற் குறுதுணையாயிருந்து அதனை நிலையுறச் செய்தற்கு இவர்மேற்கொண்ட நன் முயற்சி பெரிதும் போற்றத்தக்கதே. இவர் “பொருந்திய தேசம் பொறையுந்திறலும் புகழும் நல்ல திருந்திய ஞானமும் செல்வமும்” பெற்று இன்புறுமாறு எல்லா வல்ல எம்பெருமானை இறைஞ்சுவோமாக.

ப. அ.

மதிப்புரை.

சாவமுகூர்த்த சோதிட சின்னசாமியம்:—இது முகூர்த்த நிர்ணய முறைகளைத் தெரிந்து கொள்வதற்குச் சிறந்த நூலாம். ஸ்ரீமாந் வே. சின்னசாமி நாயுடவர்களே இந்நூலாசிரியராவர். இவர், தமிழ் மக்கள் நன்கறிந்து கொள்ளுமாறு இதில் சங்கல்பம், நவக்கிரக பூஜாவிதி, சோதிடபாவம், விவாஹப்பொருத்தம், மங்கலச்சடங்கு, அசுபகிரியாமுறை முதலிய எல்லாம் நன்கெழுதியுள்ளார். ஆலந்தூர் பிரபல இரத்தின வியாபாரிகளான ஸ்ரீமாந் P. கன்னைய நாயுடுகாரு, P. கோபால்சாமி நாயுடுகாரு என்ற பெருந்தகையாளரின் பொருளுதவியால் இந்நூல் ப்ரசுரிக்கப்பெற்றது. இதன் விலை ரூ. 2—0—0. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

விலாசம்:—

வே. சின்னசாமி நாயுடுகாரு,
நெ. 23, சின்னத்தம்பி முதலி தெரு,
திருவெட்டீசுவரன் பேட்டை, சென்னை.